# நல்லொழுக்கமுள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் ஸ்டொய்க்கியவாதத்தின் பங்களிப்பு - ஒரு விபரண ஆய்வு

# Contribution of Stoic Philosophy in the Creation of Virtuous Student Society – A Descriptive Study

Marimuthu Prahasan

**Abstract**

*In this contemporary period, due to the influence of science, information technology development and globalization, it has been estimated that education that can provide employment and economic benefits is valuable. The commercialized, profit-seeking activities of those who receive this education have a negative impact on human values, which can be harmful to humanity in the long run. A lack of personal and social morals and the creation of a culture of violence are prominent among these. Moral education can make a positive contribution in correcting violent attitudes and guiding good life. In such a situation, it is considered necessary to provide high quality and practical moral education to the students. Philosophy has the potential to provide common values for all to live in pluralistic societies. Various schools of thought in the history of philosophy can be attributed to this. Thoughts on human well-being are a distinctive feature of ancient philosophy. Among these is Stoicism, which dates back to the Hellenistic period, as a theoretical movement that offers guidelines for individual and social well-being. In the contemporary situation, the question of whether it is possible to create a universal society through ethical norms that transcend religious boundaries is also the basic problem for conducting this study. In this context, this study aims to investigate and reveal the possibilities of applying Stoicism to bring about a holistic change in the thinking, feeling and behavior of the student community and develop morally. The study has been carried out qualitatively by analyzing selected philosophical texts as secondary sources. In a society where efforts are being made to educate the youth to be virtuous, the findings of this study will be useful for parents and educators*.

**Key Words**: Ancient Philosophy, Stoicism, Virtue Education,

**ஆய்வு அறிமுகம்**

மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் தனி மனித ஒழுக்கத்தை சீரமைப்பதன் ஊடாக நல்வாழ்க்கைக்கான வழிகாட்டல்களை முன்வைத்ததில் கிரேக்க கால அரிஸ்டோட்டிலின் நற்பண்பு ஒழுக்கவியல் கொள்கை (Virtue Ethical Theory) மற்றும் கெலனிய கால ஸ்டொய்க்கிய வாதம் (Stoicism / Stoic Philosophy) என்பவை முதன்மையானவையாக உள்ளன. மனித வாழ்க்கையின் இறுதி நோக்கம் மகிழ்ச்சியாக இருப்பதே என்று குறிப்பிட்டு அது நிலைபேறானதாக அமைவதற்கு பகுத்தறிவும், ஒழுக்கமும் இணைந்த வகையில் பின்பற்றப்பட வேண்டும் என்பது இவற்றில் வலியுறுத்தப்படுகின்றது. சில விடயங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மகிழ்ச்சியை தருபவையாக இருப்பினும் நீண்டகால அடிப்படையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாகும். இக்காரணத்தினால் என்றென்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையினை வாழ்வதற்காக பின்பற்ற வேண்டிய விடயங்களை பகுத்தறிவுபூர்வமாக அறிந்துகொண்டு வாழ்வதற்கான வழிகாட்டல்களை இவை வெளிப்படுத்தியுள்ளன. இவற்றினை பின்பற்றி நடப்பதே ஒழுக்கரீதியாக ஏற்புடைமை கொண்டதாகவும் அமைகின்றது. இங்கு ஒழுக்கம் என்பது 'ஒருவர் தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் எவ்வளவு சிறப்பாக செயற்பட வேண்டும் என்று அறிந்து அவ்வாறே செயற்படுவதற்கு உள்ள அறிவும், திறமையும்' என்று புரிந்துகொள்ளமுடியும். இதற்கு முறையாக கற்கையும், தொடர்ச்சியான பயிற்சியும் அவசியமாக உள்ளன.

அறம்போல் கூர்மையான அறிவுடையவர்களாக இருப்பினும் மக்கற் பண்பு இல்லாதவர்கள் மரம் போன்றவர்கள் என்பது திருவள்ளுவருடைய கூற்று. இது எத்தகைய திறமையான காரியங்களை மேற்கொள்ளக்கூடிய இயலுமையினைக் கொண்டவர்களாக இருந்தாலும் ஒழுக்கப் பண்புகள் இல்லாதவர்களாக, சமூகத்துடன் இசைவாக, இனிமையாக நடந்துகொள்ள இயலாதவர்களாக இருப்பின் புறக்கணிப்பிற்குரியவர்களே என்பதனை வெளிப்படுத்துகின்றது. சமகாலத்தில் மாணவர்களை போட்டிமிகு தொழில் உலகிற்கு தயார்ப்படுத்தும் முயற்சிகள் அவர்களை இயந்திரத்தனமானவர்களாக, சுயவளர்ச்சியிலேயே கவனம் கொண்டவர்களாக மாற்றியுள்ள நிலையில் சமூகப்பெறுமானங்களை உள்வாங்கிக்கொண்டு பொறுப்புமிக்க தனிநபர்களாக சமூகத்தில் இணைந்து வாழ்வதற்கான கல்வியினை ஒருங்கிணைந்த வகையில் வழங்குவதும் அவசியமாக உள்ளது. ஒருவர் தன்னுடைய திறமைகளையும், நற்பண்புகளையும் உச்ச அளவில் வளர்த்துக்கொண்டு தனக்கும் சமூகத்திற்கும் ஒன்றிணைந்த வகையில் பயன்மிகு

நபராக வாழ்வதற்கான அடிப்படைகளை ஏற்படுத்துவதாக இக் கல்வி இருக்க வேண்டியுள்ளது (Holowchak, 2009: 12). அதுவே செழிப்பான, இறுதியான மகிழ்ச்சியினை பெற்றுத்தருகின்ற நல்வாழ்க்கைக்கும் அடிப்படையாக இருக்கும். இதற்காகவே புராதன மெய்யியல் பிரிவுகளில் ஒன்றாக உள்ள ஸ்டொய்க்கியவாதத்தில் உள்ள வழிகாட்டல்கள் எவ்வாறு ஒழுக்கத்திறன் மிக்க மாணவ சமூகத்தை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட முடியும் என்பதனை வெளிப்படுத்துவதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

பன்மைத்துவ சமூகங்களுடன் ஒன்றிணைந்து வாழ்வது அவசியமாக உள்ள ஒரு காலகட்டத்தில் ஒழுக்க வழிகாட்டல்களை அனைத்து சமூகங்களும் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வழங்குவது அவசியமாக உள்ளது. சமய விழுமியங்களினால் வளர்க்கப்படும் மாணவர்கள் தங்களிடையே வேறுபாட்டுணர்வுடன் செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளமையினால் சமயச்சார்பற்ற வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சுயாதீனமான தத்துவக் கொள்கைகளே இதற்கு பொருத்தமானவையாக அமைகின்றன. இவை நம்பிக்கையினாலன்றி பகுத்தறிவினை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தப்பட்டிருப்பதும் இதற்கான பிரதானமான காரணமாக அமைகின்றது. நல்லொழுக்க சமூக உருவாக்கத்தினை தத்துவங்களின் வழிகாட்டல்கள் ஊடாக கையாழ்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்படுகின்றது. ஸ்டொய்க்கியவாதமானது ஒரு மெய்யியல் இயக்கமாக வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுகின்ற நிலையில் இதன் வழிகாட்டல்கள் எவ்வாறு நல்லொழுக்கமுள்ள மாணவ சமூகத்தை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட முடியும் என்பது இங்கு பகுப்பாய்விற்கு உள்ளாக்கப்படுகின்றது. இந்த வகையில் ஆறு நூற்றாண்டுகால வரலாற்றினைக் கொண்ட ஸ்டொய்க்கியவாத அறிவு மரபில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்களை ஒழுக்கரீதியான மாணவ சமூகத்தினை உருவாக்குவதற்கு எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் என்பதனை கண்டறிந்து முறைப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளமை இந்த ஆய்வின் ஊடான அறிவுப்பணியாக அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வு வினாக்கள், ஆய்வு முறையியல்**

மாறுபட்ட கலாசாரங்களை, சமயங்களை பின்பற்றுகின்ற மக்கள் ஒன்றிணைந்து வாழ்வது இன்றியமையாத ஒரு அவசியமாக மாறிக்கொண்டுள்ள சமகால சூழ்நிலையில் அவர்களது ஒழுக்க பின்புலங்களும் விழுமியங்களும் பிரபஞ்சத்தன்மை கொண்டதாக இருப்பது நிலையான சமூக கட்டமைப்பின்

உருவாக்கத்திற்கு அவசியமாக உள்ளது. ஆனால் மாறுபட்ட சமூகங்களது ஒழுக்க வாழ்வினை நெறிப்படுத்துபவை அவை பின்பற்றுகின்ற சமயங்களாகவே உள்ளன. இதுவே ஒன்றிணைந்த வாழ்விற்கு சவாலாகவும் அமைந்துவிடுகின்றது. இந்நிலையில் சமயங்களது எல்லையினை தாண்டிய ஒழுக்க விழுமியங்களை உருவாக்கவும் பின்பற்றவும் முடியாதா என்ற பிரச்சினை எழுகின்றது. இவ்வாறு ஒரு நெறிமுறையினை உருவாக்க முடியுமா என்ற வினாவே இந்த ஆய்வினை ஊக்குவித்த பிரச்சினையாக உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்ட ஆரம்பகட்ட ஆய்வுகளில் பிரபஞ்சத்தன்மை கொண்ட நெறிமுறைகளை உள்ளடக்கியுள்ள தத்துவங்கள் பல பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டு ஸ்டொய்க்கியவாதம் இதற்கு துணை கொள்ளப்பட முடியும் என்பது அறியப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு சமகால சூழ்நிலையில் மாணவ சமூதாயத்தின் சிந்தனை, உணர்வு மற்றும் நடத்தையில் ஒருங்கிணைந்த மாற்றத்தை ஏற்படுத்தி ஒழுக்கரீதியாக வளர்த்தெடுப்பதற்கு ஸ்டொய்க்கியவாதத்தின் வழிகாட்டல்களை பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து வெளிப்படுத்துவதுவதனை நோக்காகக் கொண்டு இந்த விபரண ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்பொருட்டு ஆய்வு வினாக்களாக ஒழுக்கம் என்றால் என்ன? ஒழுக்கரீதியான வாழ்க்கை ஏன் அவசியமாக உள்ளது? ஒருவர் எத்தகைய ஒழுக்கப்பண்புகளையுடையவராக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்? மாணவர்களிடையே நல்லொழுக்கப் பண்புகளை கட்டமைப்பதில் எத்தகைய நுட்பங்கள் பயன்படுத்தப்பட முடியும்? நற்சமூக உருவாக்கத்தில் நடுநிலைத்தத்துவம் எத்தகைய பங்களிப்பினை வழங்க முடியும்? முதலானவை கட்டமைக்கப்பட்டு குறித்த இந்த ஆய்வு முன்னகர்த்திச் செல்லப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி பண்பு சார்ந்த ஆய்வாகவே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்பொருட்டு தொடர்புடைய தத்துவங்களின் மூல நூல்கள் மற்றும் அவற்றின் வியாக்கியானங்களாக அமையும் நூல்கள் என்பன பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இத்தத்துவம் முன்வைத்துள்ள நுட்பங்களை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் விமர்சன ரீதியான அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளமையின் அடிப்படையில் விமர்சனப் பகுப்பாய்வு முறையும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வுக்கு உள்ளாக்கப்படும் விடயம் தொடர்பாக ஏற்கனவே எழுதப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகளை நோக்குகின்றபோது அவை ஸ்டொய்க்கியவாதம் எவ்வாறு

மனித நல்வாழ்க்கைக்கான வழிகாட்டலை வழங்குவதாக உள்ளது என்ற தேடலை மேற்கொள்பவையாகவே அமைந்துள்ளன. மிகவும் அரிதாகவே இத்தத்துவம் ஒழுக்கரீதியாக முன்வைத்துள்ள விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டள்ளன. அதேவேளையில் தொழிநுட்ப விஞ்ஞான வளர்ச்சியடைந்து வரும் சமூகங்களில் மாணவர்களது மனக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒழுக்க விழுமியங்களை நிலைபெறச் செய்வதற்கான அவசியம் குறித்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் குறித்த இந்த ஆய்வானது பன்மைத்துவ சமூகங்களில் நிலைபேறான வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்காக மாணவ சமூகத்தினை இலக்காகக் கொண்டு பிரபஞ்சத்தன்மை கொண்ட ஒழுக்க விழுமியங்களை பின்பற்றுவதற்கு ஸ்டொய்க்கியவாதத்தின் வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து வெளிப்படுத்துவதனால் தனித்துவம் கொண்டதாக அமைந்துள்ளது. தொடர்ந்து வரும் விடயங்கள் அவ்வாறு ஆய்வுக்கட்டுரைகளில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘ஐரோப்பிய பாடசாலைகளில் குடியுரிமைக் கல்வி’ (Citizenship Education at School in Europe) எனும் ஆய்வறிக்கையில் ஜனநாயக சமூகங்களில் பொறுப்புணர்வுடைய குடிமக்களை உருவாக்குவது சமகால தேவையாக உள்ளது என்பதும் அதற்காக விழுமியக் கல்வி துணை கொள்ளப்பட முடியும் என்பதும் குறிப்பிடப்படுகின்றது. இதில் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ளுதல், வினைத்திறனான ஆக்கபூர்வமான சமூக இடைத்தொடர்பு, விமர்சனச் சிந்தனை என்பவற்றினை ஊக்குவிப்பதற்காக அறிவு, ஆற்றல், மனப்பாங்கு என்பன சமகால விஞ்ஞான தொழிநுட்ப சமூகத்தில் விருத்தி செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மனப்பாங்கின் நேர்நிலையான விருத்திக்காக ஒழுக்க விழுமியக் கல்வி பாடசாலைகளில் போதிக்கப்படுவது அவசியமானது என்ற பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிக்காக்கோ பல்கலைக்கழகத்தினால் 2007ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘மனிதாபிமானம், உலக குடிமக்களை உருவாக்குதல்’ (Cultivating Humanity and World Citizenship) எனும் ஆய்வறிக்கையில் சமகாலத்தில் விஞ்ஞான, தொழிநுட்ப, பொருளாதார வளர்ச்சியினை இலக்காகக்கொண்டு சீரமைக்கப்படுகின்ற கல்வித்திட்டங்கள் ஜனநாயக சமூக வாழ்க்கை, ஆரோக்கியமான உலக கலாசாரம் என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்கு தவறுபவையாக உள்ளன என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. இவற்றினை உருவாக்குவதற்கான ஆற்றல் மனிதாய

மற்றும் கலைத்துறை சார்ந்த கற்கைகளிலேயே உள்ளது என்பதனால் உயர்கல்வித் துறைகளில் அவற்றினை பின்பற்றுவது அவசியம் என்பதும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

Holowchak (2009) என்பவரினால் எழுதப்பட்டுள்ள 'கல்வி வாழ்க்கைக்கான ஒரு பயிற்சியாக' (Education as Training for Life) எனும் ஆய்வுக் கட்டுரை அமெரிக்க தாராளவாத கல்விக்கொள்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விடயங்கள் புராதன ஸ்டொயிக்வாதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களுடன் இசைவானதாக உள்ளமையினை விமர்சன நோக்கில் அணுகுகின்றது. சுயத்தினை அறிதல், விமர்சன மனப்பாங்கினை வளர்த்தல், உள்ளூர், சர்வதேச நெறிமுறைகள், விழுமியங்கள் தொடர்பான விழிப்புணர்வு என்பவற்றினை ஏற்படுத்துவதாக கல்வி செயற்பட வேண்டும் என்று வாதிடப்படுகின்றது. இவை தனிநபராகவும், சமூகத்திலும் நல்வாழ்க்கை வாழ்வதற்கு அவசியமான தகுதிகளாகக் குறிப்பிடப்படுகின்றன. Whiting, Konstantakos, Misiaszek (2019) ஆகியோரினால் எழுதப்பட்டுள்ள 'நிலைபேறான உலக குடிமகன்' (Education for the Sustainable Global Citizen) எனும் ஆய்வுக் கட்டுரையானது 21ஆம் நூற்றாண்டில் மனிதகுலம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஸ்டொய்க்கியவாதத்தின் வழிகாட்டல்கள் எவ்வாறு துணைகொள்ளப்பட முடியும் என்ற ஆய்வினை மேற்கொள்வதாக உள்ளது. இதன் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி, பிரபஞ்ச பிரஜை என்பவற்றினை அடைவதற்கு இத்தத்துவம் பிரயோகிக்கப்பட முடியும் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. Groenendijk, Ruyter (2009) ஆகியோர் எழுதியுள்ள 'செனேகாவிடமிருந்தான கற்றல்கள்: வாழும் கலை, கல்வி என்பன தொடர்பில் ஸ்டொயிக்வாத பார்வை' (Learning from Seneca: A Stoic Perspective on the Art of Living and Education) எனும் ஆய்வுக்கட்டுரை ஸ்டொய்க்கியவாதிகளில் ஒருவரான செனேகாவின் தத்துவங்கள் வாழும்கலை செயற்பாடுகளின் முன்னோடி என்ற வகையில் அணுகுகின்றது. இவருடைய 'ஒரு தத்துவவாதியிடமிருந்தான கடிதங்கள்' (Letters from A Stoic) என்ற படைப்பில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் பல கல்வியியலாளர்கள் தங்களுடைய மாணவர்களது நேர்நிலையான மனப்பாங்கின் விருத்திக்காக பயன்படுத்தப்படக்கூடியவை என்ற வாதத்தினை முன்வைப்பதாக உள்ளது. John Sellars (2007) என்பவர் எழுதியுள்ள 'ஸ்டொய்க்கிய பிரபஞ்சவாதம், சீனோவின் குடியரசு' (Stoic Cosmopolitanism and Zeno's Republic) எனும் ஆய்வுக்கட்டுரையானது தனித்த சமூகவாழ்க்கையில் இருந்து ஒருங்கிணைந்த சமூக

வாழ்க்கைக்கு மக்கள் திரும்புகின்ற நிலையில் அவர்களை ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்குரிய வளங்களைக் கொண்டதாக ஸ்டொய்க்கிய வாதம் உள்ளமை தொடர்பாக கவனம் செலுத்துகின்றது. உரோம பேரரசின் எழுச்சியின்போது மக்களை ஒன்றிணைத்து கட்டமைப்பதற்கு இவ்வழிகாட்டல்கள் பிரயோகிக்கப்பட்ட விதம் தொடர்பில் விரிவான விளக்கங்கள் இதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**கண்டறிந்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்**

ஸ்டொய்க்கிய வாதத்தின் மூல புத்தகங்கள், அவற்றினை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் எழுதப்பட்ட வியாக்கியான நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றில் ஒழுக்கமிகு மாணவ சமூகத்தை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்படக்கூடிய முறைகள் பற்றிய விபரங்கள் பல்வேறு உப தலைப்புக்களின் கீழ் அணுகப்படக்கூடியவையாக உள்ளன. அவை ஆய்வுவினாக்களுக்கான விடையினை கண்டறியும் வகையில் பின்வருமாறு விமர்சனரீதியாகவும், விபரண ரீதியாகவும் கண்டறிந்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்களாக அமைகின்றன.

**ஸ்டொய்க்கிய வாதம் - சுருக்கமான அறிமுகம்**

ஸ்டொய்க்கிய வாதம் சைட்டியம் நகரைச் சேர்ந்த சீனோ (Zeno of Citium – fp.K 332 - 262) என்பவரினால் புராதன கிரேக்கத்தில் இயங்கிய பல்வேறு சிந்தனைப்பள்ளிகளில் இருந்து பெற்றுக்கொண்ட ஞானத் தெளிவினை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். இவற்றில் கிரேட்டசினால் தலைமையேற்கப்பட்டிருந்த சைனிச சிந்தனைப்பள்ளி, சோக்கிரடீசிய சிந்தனைகளின் அடிப்படையில் இயங்கிய மெகாரியன் சிந்தனைப் பள்ளி, பிளேட்டோனிய அகடெமி என்பவை குறிப்பிடத்தக்கவையாகும் (O Grady, 2005:171). ஆதி கிரேக்க, கிரேக்க காலத்தில் தன்னுடைய தோற்றத்தையும் வளர்ச்சியினையும் பெற்றிருந்த இத்தத்துவம் உரோமப் பேரரசுக் காலத்தில் செழிப்பான வளர்ச்சியினைப் பெற்றிருந்தது. இக்காலத்திற்குரிய தத்துவவாதிகளான செனேகாவின் Moral Letters (Epistulae Morales), Dialogues (Dialogi), எபிக்டெடசின; Discourses மற்றும் Handbook (Enchiridion), மார்க்கஸ் அரேலியசின; Meditations ஆகியவை ஏறத்தாள ஆறு நூற்றாண்டுகால தொடர்ச்சியான வளர்ச்சியினைக் கொண்டமைந்துள்ள இப்பாரம்பரியத்தின் மூலநூல்களாக அடையாளப்படுத்தக்கூடியதாக உள்ளன

(Inwood, 2010:43). இவையே தற்போது இத்தத்துவத்துடன் தொடர்புடையதாக முழுமையாக கிடைக்கக்கூடிய புத்தகங்களாகவும் உள்ளன. ஒரு மனிதன் தன்னுடைய குணாம்சங்களை ஒழுக்கரீதியானதாக சிறப்பானதாக வளர்த்துக்கொள்கின்றபோது அவனுடைய பார்வையில் புறத்தேயுள்ள விடயங்கள், நிகழ்வுகளின் பெறுமானங்கள் வலுவற்றதாகின்றன, அவற்றினை எவ்வாறு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதனை அவனே தீர்மானிக்கின்ற இயல்பினைக் கொண்டிருப்பதனால் குறித்த புறவிடயங்கள் அவனை பாதிப்புக்கு உள்ளாக்குவது இல்லை. இதுவே நல்வாழ்க்கைக்கு அடிப்படையான பண்பாக அமைகின்றது என்பது இவ்வாதத்தின் வெளிப்படுத்தலாக உள்ளது. இவ்வுண்மையினை இளம் பிராயத்தினர் தெளிவாக உள்வாங்கிக்கொண்டு பின்பற்றுவதானது நிலைபேறான வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்வதாக இருக்கும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாக உள்ளது.

**ஒழுக்கத்தின் அவசியம்**

போட்டி மிகுந்த உலகில் வெற்றியை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றபோது வெற்றியடைவதற்காக பின்பற்ற வேண்டிய நியமங்கள் எவை என்று அறிந்து பின்பற்றுவது அவசியமா? அல்லது ஒழுக்கரீதியாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை அவதானித்து செயற்படுவது அவசியமா? என்ற இரு வினாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒழுக்கம் மனிதர்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கான கருவியாக உள்ளது. ஒழுக்கமானவன் என்று அடையாளப்படுத்தப்படுகின்ற ஒருவன் பெறுகின்ற சமூக அந்தஸ்து உயர்வானதாகும். அதுபோல இலக்குநோக்கி தவறாது முன்னேறி வெற்றி பெறுவதற்கு நிரூபிக்கப்பட்ட ஒழுக்க நெறிகளை பின்பற்றுவது அவசியமாகும். இதனால் ஒழுக்க பின்பற்றுகை என்பது மேலோட்டமான பார்வையில் ஒருவர் தன்னுடைய விருப்புக்களை தியாகம் செய்கின்றார், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளார் என்று தோன்றும் ஆனால் அதுவே ஒருவர் வாழ்வில் உச்ச நிலையை அடைவதற்கும் அதிரித்த அளவிலான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கும் நல்வாழ்க்கை வாழ்வதற்கும் பங்களிப்பு செய்வதாக அமைகின்றது (Pojman, 2005:8) என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைப்பாடாக உள்ளது. எனவே ஒருவர் தனிப்பட்ட வாழ்க்கையிலும், தொழில் வாழ்க்கையிலும் வெற்றி பெறுவதற்கு அவர் வளர்த்துக்கொள்ளக்கூடிய தொழிநுட்ப அறிவு மாத்திரம் போதுமானது அல்ல மாறாக ஒழுக்க அறிவும் அவசியமாக உள்ளது என்பது அடிப்படை உண்மையாகின்றது.

ஸ்டொய்க்கியவாத அறிவாராட்சியியலில் ஒழுக்கம் என்பது ஒரு அறிவாக நோக்கப்படுகின்றது. நீதி (Justice)> தைரியம் (Courage)> விவேகம் (Prudence)> சுயகட்டுப்பாடு (Temperance) என்ற நான்கும் உண்மையான நன்மையினை உருவாக்குவதற்கான ஒழுக்க பண்புகளாக குறிப்பிடப்படுகின்றன. இறுதியான மகிழ்ச்சியினை அனுபவிப்பதற்கு இவை ஒன்றிணைந்த வகையில் செயற்படுவது அவசியமானதும் போதுமானதுமான நிபந்தனைகளாக அமைகின்றன. இதற்கு எதிர்மாறான அநீதி, கோழைத்தனம், அறியாமை, கட்டுப்பாடற்ற பேராசை என்பன எந்த சந்தர்ப்பத்திலும் ஒருவரிடத்தில் இருப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இல்லை. இவை தீமையான விடயங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இதனால் குறித்த நான்கு நற்பண்புகளைத் தவிர ஏனைய எவையும் கவனத்திற்குரியவையாக எடுக்கப்படவில்லை (Stephens, 2007:26). அதாவது ஒருவர் குறித்த நான்கு பண்புகளையும் தன்னுடைய வாழ்க்கையில் தவறாது பின்பற்றுவதற்கு கற்றுக்கொள்வதானது மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அவசியமானதாகவும் போதுமானதாகவும் நடுநிலைத்தத்துவத்தில் அணுகப்படுகின்றது.

இவ்வாறு மகிழ்ச்சியும் ஒழுக்கமும் ஒன்றுடன் ஒன்று இன்றியமையாத தொடர்பினைக் கொண்டவையாக காட்டப்படுகின்றன. இவற்றில் மகிழ்ச்சி என்பது கிரேக்க மொழியில; *Eudaimonea* எனவும் ஒழுக்கம் என்பது *arête* எனவும் குறிப்பிடப்படுகின்றன. உண்மையில் மகிழ்ச்சி (ஆங்கிலத்தில் Happy என்று மொழிபெயர்க்கப்படுகின்றது) என்று மொழிபெயர்க்கப்படுகின்ற கிரேக்கச் சொல் ஆழமான அர்த்த உள்ளடக்கங்களைக் கொண்டதாக உள்ளது. இதனை 'ஒரு மனிதன் தன்னுடைய இயல்பிற்கு ஏற்ப அடையக்கூடிய உச்சமான நிலையினை வாழ்க்கையில் அடைந்துகொள்ளுதலும் செழிப்பாக வாழ்தலும்' என்று புரிந்துகொள்ளப்பட முடியும். அதாவது ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் அடைந்துகொள்ளக்கூடிய மிக உயர்ந்தபட்ச நன்மையாகும் (Jones, 2013:14). சோக்கிரடீஸ் முதற்கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள புராதன ஒழுக்க சிந்தனைகள் மனிதர்கள் இத்தயை வாழ்க்கையினை அடைவதற்கான வழிகாட்டல்களை மேற்கொள்பவையாகவே அமைந்துள்ளன. இவற்றில் சிறப்பான ஒன்றாகவே ஸ்டொய்க்கிய வாதத்தின் வழிகாட்டல்கள் அமைந்துள்ளன.

**எத்தகைய ஒழுக்கம் பின்பற்றப்பட வேண்டும்**

தனிமனித, சமூக நல்வாழ்க்கைக்கு ஒழுக்கம் அவசியமானது என்று குறிப்பிடப்படுகின்றபோது ஒழுக்கம் என்றால் என்ன? ஒருவர் எத்தகைய ஒழுக்கமுடையவராக தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும்? என்ற வினாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. நியமங்கூறும் ஒழுக்கவியல் கொள்கைகளில் ஒன்றான அரிஸ்டோட்டிலின் நற்பண்பு ஒழுக்கவியல் கொள்கையின் (Virtue Ethics) வழிகாட்டல்கள் இதற்கு துணை கொள்ளப்பட முடியும். இதன் அடிப்படையானது ''மனிதர்கள் தங்களது இயலுமைக்கு ஏற்ற வகையில் முழுமையான வாழ்க்கையினை வாழ்வதற்கான முறை'' ஒழுக்கம் என்றும் ''ஒரு செயற்பாட்டின் ஒழுக்க ரீதியான ஏற்புடைமை என்பது அது ஏற்படுத்தும் விளைவுகளிலோ அல்லது அச் செயற்பாட்டின் இயல்பிலோ அல்லாமல் அச் செயலினை செய்பவருடைய இயல்பான நல் மனப்பாங்கிலும் நற்பண்பிலுமே தங்கியுள்ளது" என்பதனால் அவ்வாறான ஒழுக்கத்தையே வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது. ஒருவர் தன்னுடைய முழுமையான ஆற்றலையும் வளர்த்துக்கொள்வதன் ஊடாக முழுமையான வாழ்க்கையினை வாழ்வதற்கு இவ்வாறு நற்பண்பாக ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்வது அவசியமாக குறிப்பிடப்படுகின்றது (Hughes, 2001:22). இவ் ஒழுக்கமானது மனிதர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற வழிகாட்டலாக அல்லாமல் மனிதர்கள் எவ்வாறு வளர வேண்டும், எவ்வாறு வாழ வேண்டும் என்ற வழிகாட்டலாகவே உள்ளது. இந்த ஒழுக்க நற்பண்புகள் மீண்டும் மீண்டும் பயிற்சி செய்கின்றபோது கற்றுக்கொள்ளப்பட்டு இயல்பான குணாம்சங்களாக மாறக்கூடியவையாகும். இதற்கு அவசியமாக இருப்பது அர்ப்பணிப்புடனான கற்றலும், கற்றதை தொடர்ச்சியாக பயிற்சி செய்வதுமேயாகும் (Vaughn, 2016:136).

இவ்வகையில் நன்மை ஒன்றினை எதிர்பார்த்து குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒழுக்கமானவனாக நடந்துகொள்வதும் பின்னர் அப்பண்புகளுக்கு முரணாக நடந்துகொள்வதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. எப்போதும் ஒருவருடைய வாழ்க்கையில் நீடித்து நிலைத்திருக்கக்கூடியதாக நல்ல பண்புகள் வளர்க்கப்பட்டு அவை பின்பற்றப்பட வேண்டும். இவ்வாறு ஒழுக்கம் இயல்பான ஒன்றாக அமையப்பெற்றிருக்கும்போது அந்த மனிதன் எந்தவொரு சூழ்நிலையினையும் நிதானமாக எதிர்கொள்ளக்கூடிய இயலுமையினைக் கொண்டவனாக இருப்பான். இதுவே நல்வாழ்க்கைக்கான அடிப்படையாக அமைகின்றது.

**ஒழுக்க போதனையாளர்களது பண்புகளும் செயற்பாடுகளும்**

ஒழுக்கம் கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொடுக்கப்படவும் கூடியது என்பது இவ்விடத்தில் மகிழ்ச்சியான ஒரு செய்தியாகும். ஆனால் கற்றுக்கொடுக்கின்ற போதனையாளர்கள் குறிப்பிட்ட சில விசேட பண்புகளைக் கொண்டவர்களாக இருப்பது இன்றியமையாததாகின்றது. செனேகாவின் நூற்றி எட்டாவது தத்துவக் கடிதம் ''எமக்கு தேவையாக இருப்பது சரியான நடத்தைகளுடன் எங்களை வழிநடத்துபவர்களே தவிர வெறும் பேச்சுக்களை மேற்கொள்பவர்கள் அல்ல'' என்று குறிப்பிடுகின்றது. இது மாணவர்களுக்கு ஒழுக்கத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் அந்த விடயங்களை தங்களுடைய வாழ்க்கையில் உறுதியாக பின்பற்றி சிறந்த முன்னுதாரணங்களாக திகழ வேண்டும் மாறாக நல்ல விடயங்கள் எவை என்று கொள்கையளவில் பிரசங்கம் செய்பவர்களாக மாத்திரம் இருப்பது போதாது என்பதனை வெளிப்படுத்துகின்றது. இளம் பிராயத்தினர் வார்த்தைகளையும், எழுத்துக்களையும் பின்பற்றுவதனைவிட நடத்தைகளையே பின்பற்றுகின்றனர். இதனாலேயே ''தான் போதிக்கின்ற விடயங்களுக்கு மாறான செயற்பாடுகளை மேற்கொள்பவர்களே இந்த உலகிற்கு அதிகளவான தீங்குகளை மேற்கொள்பவர்களாக இருக்கின்றனர்'' (Seneca, 2015:463) என்று குறிப்பிடப்படுகின்றது. மனித ஆன்மாவிற்குரிய மருந்தாக தத்துவம் தொடர்ச்சியாக ஆசிரியர்களினாலும் மாணவர்களினாலும் பயிலப்படுவதும் பின்பற்றப்படுவதும் அவசியமாக உள்ளது.

உடல்நோயினை குணமாக்காத வைத்தியத்தினை தொடர்ந்து மேற்கொள்வது எந்தளவு பயனற்றதோ அதுபோன்றதே உளநலனை மேம்படுத்துவதற்கு உதவாத கல்வியினை கற்பதுவுமாம். ஒரு சூடான பொருளை தொடர்ந்து அதேநிலையில் வைத்திருப்பதற்கு அதனை தொடர்ச்சியாக சீரான அளவில் சூடேற்றிக்கொண்டிருப்பது அவசியமானதுபோல நற்பண்புடைய ஆசிரியர்களும் தங்களது உயர் நற்பண்பு நிலையினை பேணிக்கொள்வதற்காக கற்ற விடயங்களை தொடர்ந்து தியானம் செய்வது அவசியமாக உள்ளது (செனேகா, தத்துவக்கடிதம் 100, 108). இத்தகையவர்களே மாணவர்களுக்கு ஒழுக்கத்தை பயிற்றுவிப்பதற்கான தகுதியினைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். மேலும் மாணவர்களது சமூகவெளிப்பாடு அதிகமாக உள்ள தற்போதைய நிலையில் அவர்கள் யாருடைய நடத்தைகளினால் கவரப்படுகின்றனர், யாரை பின்பற்ற முனைகின்றனர் என்று

அறிந்திருப்பது பெற்றோருடைய பொறுப்பாகவும் உள்ளது. பிரபலங்களது வாழ்க்கைமுறைகளால் கவரப்படுவதும் அதனை பின்பற்ற முயற்சிப்பதும் இளைஞர்களுக்கு மகிழ்ச்சிகரமான ஒன்றாக உள்ளது. ஆனால் அத்தகையவர்களது வெற்றிக்கு பின்னால் இருக்கின்ற அர்ப்பணிப்பும், கடின உழைப்பும் அறியச்செய்யப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. இவர்களையும் தாண்டி இவ்வுலகில் மகத்தான காரியங்கள் ஊடாக மக்களது நல்வாழ்க்கைக்கான மாற்றங்களை ஏற்படுத்தியவர்களது வாழ்க்கையும் இளையவயதினர் அறிந்துகொள்வது சிறப்பானது. இது அவர்களது நேர்நிலையான சுயத்தின் உருவாக்கத்திற்கும், ஒழுக்க வளர்ச்சிக்கும், முழுமையான நல்வாழ்க்கைக்கும் பங்களிப்பு செய்வதாக இருக்கும் (Didymus, Pomeroy, 1999: 167)

நல்லொழுக்கமுள்ள மாணவ சமூகத்தை உருவாக்குவது என்பது உடனடியாக செய்து முடித்துவிடக்கூடிய ஒரு செயல் அல்ல. ஒரு செயன்முறையாக அமையும் இதில் சரியான திட்டமிடல்கள், அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள், சவால்களை எதிர்கொள்வதற்கான திறன் என பலதரப்பட்ட விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. புறவுலகில் ஒரு நேர்நிலையான மாற்றத்தை மேற்கொள்ள முயற்சிக்கும் இச்செயற்பாட்டின்போது எபிக்டெடசின் கருத்தான ''ஒருவர் புறவுலகில் உள்ள அனைத்து விடயங்களும் தன்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை'' என்பதனை புரிந்துகொள்ள வேண்டும். இது ஒவ்வொரு விடயங்களும், மனிதர்களும் தனித்துவமாக கையாழப்பட வேண்டியுள்ளன என்பதனை வெளிப்படுத்துகின்றது. மாணவர்களது மனப்பாங்கு நிச்சயமாக ஆசிரியருடைய அதிகாரத்தில் இல்லை. ஆனால் அவர்கள் வெளிப்படுத்தும் நடத்தைக்கு எவ்வாறு எதிர்வினையாற்ற வேண்டும் என்பது அவருடைய இயலுமையின் கீழேயே உள்ளது. இதனால் மார்க்கஸ் அரேலியசின் நுட்பமான 'எதிர்மறை காட்சிப்படுத்தலை' (Negative Visualization) பயன்படுத்தி தான் மேற்கொள்ளும் முயற்சியின்போது எதிர்கொள்ளக்கூடிய எதிர்மறையான மனிதர்கள், நிகழ்வுகள் தொடர்பாக முன்னோக்கிய அறிவுடன் அவை அனைத்தின்போதும் நிதானமாக செயற்படுவதற்கான தயார்ப்படுத்தலுடன் செயற்படுவது அவசியமாக உள்ளது (Didymus & Pomeroy, 1999: 247). இவ்வாறு ஆசிரியர்களுடைய பண்புகளும் செயற்பாடுகளும் முறைப்படுத்தப்பட்ட வகையில் இருக்குமாயின் அவர்களினால் சிறந்த ஒழுக்க போதனையாளர்களாக, முன்மாதிரிகளாக செயற்பட முடியும்.

இவர்களை பின்பற்றுகின்ற மாணவர்கள் தங்களை சிறந்த பண்புகளுடன் உருவாக்கிக்கொள்வதும் இலகுவாக இருக்கும்.

**பன்மைத்துவத்தை புரிதலும் ஏற்றுக்கொள்ளுதலும்**

பன்மைத்துவ சமூகங்களில் ஒன்றிணைந்த வாழ்க்கை வாழ்வதற்கு தனிமனிதர்களுக்கு பல்வேறு இயலுமைகள் அவசியமாக உள்ளன. ''பரிசோதனைக்கு உள்ளாக்கப்படாத வாழ்க்கை வாழ்வதற்கு தகுதியற்றது'' என்ற சோக்கிரடீசின் போதனைக்கு இணங்க ஒருவர் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கள், தன் சமூகத்தின் விழுமியங்கள், கலாசாரங்கள் என்பவற்றினை சீர்தூக்கிப்பார்த்து விமர்சனரீதியான ஆய்வுக்கு உள்ளாக்கக்கூடியவராக இருப்பது இவற்றில் முதன்மையானது. இதுவே சுயாதீனமான ஆன்மாவுடன் அனைத்து தடைகளையும் தாண்டி மனிதாயத்தை நேசிக்கும் இயலுமையுடைய 'உலகலாவிய குடிமகனாக' (Global Citizen) வாழ்வதற்குரிய இயலுமையினை வழங்குவதாக உள்ளது. மனிதர்கள் எந்த சமூகத்தை சேர்ந்தவர்கள், எந்த அரசியல் கருத்தினைக் கொண்டவர்கள், எத்தகைய பொருளாதார அந்தஸ்தினைக் கொண்டவர்கள் என்ற விடயம் கருத்தில் கொள்ளப்படாமல் அனைவருக்கும் சமமான அந்தஸ்து நிபந்தனையற்ற வகையில் வழங்கப்பட வேண்டும் என்ற கஸ்மோபொலிடனிசம் (Cosmopolitanism) என்ற சிந்தனை இத் தத்துவத்தினாலேயே முதலாவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தத்துவவியலாளர் ஹிரோக்கில்ஸ் (Hierocles) தனிமனித சுயத்தை மத்தியில் வைத்து அடுத்தடுத்ததாக குடும்பம், விரிவான குடும்பம், உள்ளூர் சமூகம், அடுத்த சமூகங்கள், நாடு, ஒட்டுமொத்த மனித இனம் என்ற வட்டங்களை வரைந்து அனைத்து மனிதர்களும் ஒவ்வொரு மனிதரதும் கரிசனைக்குரியவர் என்ற போதனையினை முன்வைக்கின்றார் (Davis, 1903: 97).

இதன்பொருட்டான ஒழுக்க சிந்தனை ''அந்நியமான விடயங்களுடன் பரிச்சயமாகிக்கொள்ளுதல்'' (*oikeiôsis*) என்று கட்டமைத்து ஒருவர் தனக்கு முன்னர் அறிமுகம் இல்லாதவர்களையும் தன்னுடைய உறவினர் என்ற அடிப்படையிலேயே அணுக வேண்டும், மற்றவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும்போது அவ்விடத்தில் தான் இருந்தால் எவ்வாறான உணர்வினைக் கொண்டு செயற்படுவேன் என்ற அடிப்படைகளில் நோக்க வேண்டும் என்ற வழிகாட்டல்களை முன்வைக்கின்றது (Pigliucci, 2017:46). இவ்வாறு ஸ்டொய்க்கிய வாதம் அந்நியர்கள், பெண்கள்,

அடிமைகள் என சமூகத்தில் பல்வேறு நிலைகளில் இருந்தவர்களையும் சமமாக மதிக்க வேண்டும் ஏனெனில் அவர்கள் ஒவ்வொருவரும் ஒழுக்க பிரபஞ்சத்தின் அங்கத்தவர்கள் என்ற விடயத்தினை கண்டிப்புடன் நிலைநிறுத்துகின்றது (Forschner, 1993:45). அனைத்து மனிதர்களும் ஒரே தரத்தினைக் கொண்டவர்களாக நடாத்தப்பட வேண்டும் என்பது மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் வேறு எந்தவொரு ஒழுக்கக்கொள்கையும் வெளிப்படுத்தாத ஒன்றாகும் என்ற அடிப்படையில் இவ்வாதம் சிறப்பிற்குரிய ஒன்றாக அமைகின்றது.

இதன் மறுவகையான வெளிப்படுத்தலே ‘‘நாம் அனைவரும் ஒருங்கிணைந்த ஒரு அமைப்பின் பகுதிகளாக உள்ளோம். இதில் யாதேனும் ஒரு பகுதியில் ஏற்படும் தாக்கம் நிச்சயமாக அனைத்து பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்’’ என்பதாகும். இவ்வாறு ஒருங்கிணைந்த சமூகத்தில் இணக்கமாக வாழ்வது ஒவ்வொருவரும் தங்களது வாழ்க்கையினை பாதுகாத்துக்கொள்வதற்கும் செழிப்பாக்கிக் கொள்வதற்கும் இன்றியமையாதது என்பது தெளிவாகின்றது. இக்காரணத்தினாலேயே இன்றையகால ஆசிரியர்கள் கலாசார பன்மைத்துவம் கொண்ட சூழலில், சர்வதேசத்தன்மைகொண்டு வாழ்க்கை வாழ்வதற்கான குடிமக்களை வடிவமைக்கும் பொறுப்பில் உள்ளனர். பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும் கற்பிக்கப்படும் பாடங்கள் மாணவர்கள் ஒரு சிறிய இனக்குழு என்ற எல்லையினைத்தாண்டி சர்வதேச குடிமக்களாக உணர்வதற்கும், சிந்திப்பதற்கும், செயற்படுவதற்கும் உரிய இயலுமையினை வழங்க வேண்டும். குறிப்பாக சிக்கலான பிரச்சினைகளை மனிதாபிமான முறையில் கையாண்டு தீர்க்கின்ற இயலுமையினை மாணவர்களிடையே வளர்ப்பதற்கு பயன்பட வேண்டும் (Nussbaum, 1998:6) என்று குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய கற்றலானது தொழிற்சாலைகளுக்கு பணியாளர்களைகளையும், முகாமையாளர்களையும் உருவாக்குகின்ற கல்வித் திட்டங்களினால் மேற்கொள்ளப்பட முடியாததாகும். அவை இயந்திரத்தன்மை கொண்ட சமூகத்தின் உருவாக்கத்திற்கே பங்களிப்பு செய்வதாக இருக்கும். இக்காரணத்தையிட்டு மனிதர்களது சிந்தனையில், உணர்வில், நடத்தையில் நேர்நிலையான மாற்றங்களை ஏற்படுத்துகின்ற சக மனிதர்களை நேசிக்கின்ற நிலையினை ஏற்படுத்துவதற்கான முறைகள் பற்றி சிந்திப்பதும் செயற்படுவதும் அவசியமாக உள்ளன.

**தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தல்**

தலைமைத்துவத்திற்குரிய அடிப்படையான நற்பண்புகளாக தைரியம், விவேகம், நிதானம், பெருந்தன்மை, பணிவு என்பன முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் அடிப்படையான விடயம் மக்களை வார்த்தைகளினாலும், பயத்தினாலும், நிர்ப்பந்தத்தினாலும் வழிநடாத்துதல் என்பதாக அல்லாமல் முன்மாதிரியான செயற்பாடுகளினாலும், பொதுவான நன்மைகளை இலக்காகக் கொண்டும், ஒழுக்கத்தினாலும் வழிநடாத்துவதாகும். இதுவே இறுதியான நன்மைகளை பெற்றுத்தரக்கூடியதாகும். இதுவே ‘‘நீங்கள் செய்து முடிக்க விரும்புகின்ற செயற்பாட்டினை பிறர் ஒருவர் தான் செய்ய வேண்டியது என்று உணர்ந்து செய்ய வைப்பதற்கான கலையே தலைமைத்துவமாகும், இங்கு உங்களுடைய பதவிநிலையோ அதிகார பிரயோகமோ அதற்கான காரணமாக இருக்கக்கூடாது’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்டொய்க்கியவாதம் ஊக்குவிக்கும் தலைமைத்துவப் பண்புகள் தொடர்பாக நோக்குகின்றபோது பின்வரும் விடயங்களை குறிப்பாக அடையாளப்படுத்தக்கூடியதாக உள்ளன. முதலாவதாக எதிர்காலத்திற்கான சரியான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்வது அமைகின்றது. செனேகாவின் கருத்துக்களில் ஒன்று ‘‘எதிர்பார்க்கப்படாத ஒன்று இடம்பெறும்போது மிகுந்த பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது எனவே எதுவும் எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் இடம்பெறுவதற்கு அனுமதிக்கக்கூடாது. இதற்காக எதிர்காலத்தின் நல்ல விடயங்களை மாத்திரமல்லாமல் இடம்பெறக்கூடிய எதிர்மறையான நிகழ்வுகளையும் கணக்கிட்டு செயற்பட வேண்டும்’’ என்று அமைகின்றது. இது மனிதர்கள் நேர்நிலையான முன்னேற்றத்திற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ளும்போது எதிர்கொள்ளக்கூடிய சவால்களையும் முன்கூட்டியே கணக்கிட்டு அவற்றினை வெற்றி கொள்வதற்குரிய தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதனை வெளிப்படுத்துகின்றது. இது புறவுலகில் நடைபெறுகின்ற அனைத்தும் ஒருவருடைய கட்டுப்பாட்டில் இல்லை என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலான செயற்பாடாகும். இதுவே ‘‘நாம் மோசமான எதிர்காலத்தை கணக்கிட்டு தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ளவில்லை எனில் எந்த தயார்ப்படுத்தல்களையும் மேற்கொள்ளவில்லை என்பதே உண்மையாகும்’’ என்ற இத்தத்துவத்தின் அடிப்படையான போதனையாக வெளிப்படுகின்றது (Davis, 1909:326 - 330).

சுயகட்டுப்பாடும் பிறருடைய நலன்தொடர்ப்பில் சரியான கவனமெடுத்தல்களும் அடுத்த முக்கியமான அம்சங்களாகும். இது மார்க்கஸ் அரேலியசின் வார்த்தைகளில் ‘‘பிறருடைய செயற்பாடுகள் தொடர்பில் பொறுமையாக இருங்கள் உங்களுடைய

செயற்பாடுகள் தொடர்பில் கண்டிப்பாக இருங்கள்'' என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது பிறரை நிர்வகித்து செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் பின்பற்ற வேண்டிய முக்கியமான பயிற்சியாகும். இதுவே செனேகாவின் வார்த்தைகளில் ''தத்துவம் என்பது சொந்த தவறுகளை கண்டறிந்து அகற்றும் செயற்பாடே தவிர பிறருடைய குறைகளை பேசிக்கொண்டிருக்கும் ஒன்று அல்ல'' என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பிறருடைய செயற்பாடுகள் உண்மையிலேயே தவறானவையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் கோபத்திலோ பழிவாங்கும் மனப்பாங்கிலோ அவர்களுக்கு எதிராக எதிர்வினையாற்றாது அவர்களை திருத்துகின்ற, குணப்படுத்துகின்ற நோக்கிலேயே செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதுவே சிறந்த தலைவருக்கான பண்பாகும். பேச்சு, உணவு, உடை, வாழ்க்கைமுறை என்பவற்றில் கட்டுப்பாட்டுடன் செயற்படுவது தலைமைத்துவத்திற்கு இன்றியமையாத அவசியங்களாகும். சீனோவின் கூற்றான ''நாவினால் ஒரு பயணத்தை மேற்கொள்வதனைவிட பாதங்களினால் மேற்கொள்வது சிறந்தது'' என்ற கூற்று இதனை வெளிப்படுத்துகின்றது (Inwood, 2010: 149). நடுநிலைத்தத்துவம் தலைவர்கள் கவர்ச்சிக்கு இரையாகாமல் தேர்ந்தெடுத்து பின்பற்றுவதற்கு உகந்தது எதுவென அறிந்து செயற்படுவதில் வல்லவர்களாக இருப்பதற்கான வழிகாட்டல்களை முன்வைப்பதாக உள்ளது. இவற்றினை கற்றுக்கொள்வதும் பின்பற்றுவதும் சுய தேர்ச்சி (Self- Mastery) பெறுவதற்கு இன்றியமையாதவையாகின்றன.

தலைமைத்துவத்திற்கான அடுத்த இன்றியமையாத பண்பு தவறுகளை ஏற்றுக்கொள்வதற்கும் சரியாக திருத்தியமைத்துக்கொண்டு செயற்படுவதற்கும் தயாராக இருப்பதுவுமாகும். இதனை மார்க்கஸ் அரேலியசின் ''யாரேனும் என்னை திருத்த முடியுமானால் நான் எவ்வாறு விடயங்களை தவறான கோணங்களில் அணுகுகின்றேன் என்பதனை சொல்லுங்கள் அதனை ஏற்றக்கொள்வதற்கு மகிழ்ச்சியாக உள்ளேன். யாரும் உண்மையினால் பாதிக்கப்படுவதில்லை மாறாக சுய-வஞ்சத்தினாலும், அறியாமையினாலுமே பாதிக்கப்படுகின்றனர்'' என்ற வாக்கியத்தின் ஊடாக அறிந்துகொள்ள முடிகின்றது. உண்மையில் தலைமைப்பொறுப்பில் உள்ளவர்கள் தங்களது தவறுகளை திருத்திக்கொள்வதனைவிட அவற்றினை நியாயப்படுத்த முனையும்போதே அதிகமதிகமான பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன (Didymus, &Pomeroy, 1999: 176) என்பது அடிப்படையில் தெரிந்து பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு தலைமைத்துவம் என்பது பொதுவான நன்மையினை இலக்காகக் கொண்டு செயற்படுவதற்கு உள்ள ஒரு வாய்ப்பு என்பதனை புரிந்துகொண்டு புறவுலக புகழ்ச்சி மற்றும் இகழ்ச்சிகளை கவனத்தில் கொள்ளாது, அனைத்து விடயங்களிலும் உள்ள சாதகமான விடயங்களை எடுத்துக்கொண்டு தடைகளாக உள்ளவற்றினையே முன்னேற்றத்திற்கான பாதையாக பயன்படுத்தி செயற்படுவது சிறந்த தலைமைத்துவத்திற்கான பண்புகளாக இளைய சமூகத்திற்கு கற்பிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

**பெறுமதியான இலக்குகளை நிர்ணயித்தலும் செயற்படுதலும்**

இவ்விடயம் தலைமைத்துவத்துடன் தொடர்புபடுத்தி நோக்கப்பட வேண்டியதாக உள்ளது. சிறந்த தலைமைத்துவ பண்புகளைக் கொண்டவர்கள் தமக்கும், சமூகத்திற்கும் நீண்டகால அடிப்படையில் நன்மையினை ஏற்படுத்தக்கூடியது எதுவென்பதனை நன்கு அறிந்து செயற்படக்கூடிய இயலுமையினைக் கொண்டவராக இருப்பார். வெறுமனே புறக்கவர்ச்சியினால் ஆற்கொள்ளப்பட்டோ, குறுகியகால இலாபங்களை இலக்காகக்கொண்டோ, குறித்த ஒரு சமூகத்திற்கு மாத்திரம் நன்மையினை தரக்கூடியவற்றினையோ இவர்கள் செய்ய மாட்டார்கள். மாறாக பிரபஞ்ச நோக்கும் செயற்பாடுமே அடிப்படையான இலட்சணங்களாக அமைந்திருக்கும். இதற்காக புறப்பொருற்களது பெறுமானங்களை ஒழுக்க நோக்கில் அணுகுகின்ற இயலுமையினைக் கொண்டவர்களான பயிற்றப்பட்டிருப்பது அவசியமாகின்றது. செனேகாவின் கருத்தான “ஞானமுடைய மனிதர்கள் ஒவ்வொரு விடயத்திற்கும் எத்தகைய பெறுமதியினை வழங்கவேண்டும் என்று அறிந்தவர்களாக இருப்பார்கள்” (Hadot, 2001: 158) என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக அமைகின்றது. இவ்வாறு புறப்பொருற்களது பெறுமானம் சரியாக அறியப்பட்டிருப்பதானது நேரம் உள்ளடங்களாக கிடைப்பனவாக உள்ள வளங்களை எவ்விதத்தில் வினைத்திறனாக பயன்படுத்துவது என்ற தீர்மானத்தை மேற்கொள்வதற்கு உதவுகின்றது. இதுவே எத்தகைய விளைவுகள் பெற்றுக்கொள்ளப்படும் என்பதனையும் இறுதியில் வாழ்க்கைத் தரத்தினையும் தீர்மானிப்பதாக உள்ளது. இவ்வாறு பொருற்களது அல்லது விடயங்களது உண்மையான பெறுமானம் அல்லது மதிப்பு என்பதனை குறிக்கும் *யுஓயை* எனும் கிரேக்கச் சொல் மார்க்கஸ் அரேலியசினாலும், எபிக்டெடசினாலும் மனிதர்களது பண்புநலன்களுடன் தொடர்புடையதாக விரிவாக அணுகப்பட்டுள்ளது (Long, 2004: 182).

புறப்பொருற்களின் பெறுமதி சரியாக அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் அவற்றினை அடைந்துகொள்வதற்கான திட்டமிடல்கள் அடுத்தநிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன. இத் தத்துவப் பள்ளியின் ஐந்தாவது தலைவராக செயற்பட்ட அன்டிபடர் (Antipater) இத் திட்டமிடலின் முதற்படியான இலக்கினை நிர்ணயித்தலை குறியீட்டு வடிவில் வெளிப்படுத்துவதற்காக ஒரு வில்லாளனின் படத்தினை பயன்படுத்தியுள்ளார். இது இலக்கினை நிர்ணயித்து அதனை நோக்கிச் செயற்படுகின்றபோது கவனத்தில் கொள்ளவேண்டிய புறவிடயங்களும் சுட்டிக்காட்டப்படுகின்றன. உதாரணமாக அம்பு இலக்கினை சென்றடைவதில் வில்லாளியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்ற காற்றுவீசும் திசை, வேகம், வெப்பநிலை, ஈரப்பதன் என்பனவும் தாக்கம் செலுத்துகின்றன. எனவே இலக்கிணை அடையும் செயல்முறையில் ஒருவர் தன்னுடைய ஆளுகைக்கு உற்பட்டவற்றினை சரியாக செய்வதுடன் ஆளுகைக்கு அப்பாற்பட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து செயற்படுவதும் இன்றியமையாததாக உள்ளது. எவ்வாறாயினும் புறக்காரணிகளின் தாக்கத்தினால் இலக்கு அடையப்படாமல் போகும்போது தெளிவான அறிவுடையவர்களாக இருக்கும் பட்சத்தில் அதனையிட்டு மனமுறிவடைவதற்கு அவசியம் இல்லாத போகின்றது. இது கடமையினை செய்வதே ஒருவரது பொறுப்பாக உள்ளது அடுத்த நிலையில் விளைவுகள் என்பவை இயல்பாக நடைபெறுபவையாக உள்ளன என்ற உண்மையினை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதுவே நல்ல தலைவர்கள் தோல்வியினை எதிர்கொள்வதற்கும் பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதன் அடிப்படையாக உள்ளது (Didymus, & Pomeroy, 1999: 92).

### நட்பு தொடர்பான வழிகாட்டல்கள்

நட்பு தொடர்பான வழிகாட்டல்களை முன்வைப்பதில் செனேகாவின் தத்துவக் கடிதங்கள் முக்கியத்துவம் கொண்டவையாக உள்ளன. செனேகாவின் கடிதங்கள் தற்போது Letters from A Stoic (இதனை தமிழில் '*ஒரு நடுநிலைத் தத்துவவாதியிடமிருந்தான கடிதங்கள்*' என்று நாம் மொழிபெயர்த்துக்கொள்ள முடியும்) என்ற பெயரில் நூற்று இருபத்து நான்கு கடிதங்களை உள்ளடக்கியதாக தொகுக்கப்பட்டுள்ளன. இவை ஆன்மா, மிகச்சிறந்த நன்மை, மனித உறவுகள், வாழ்க்கை மேம்பாடு மற்றும் ஒழுக்கம் சார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. இவற்றில் மூன்று, ஆறு, ஒன்பது,

முப்பத்தைந்து, நாற்பத்து ஒன்பது, அறுபத்து மூன்று ஆகிய ஆறு கடிதங்களில் நட்பு தொடர்பில் விரிவான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன (Inwood, & Gerson, 1988: 112). முதலாவதாக நண்பன் என்ற சொல்லினை சரியான வகையில் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி பெயர் தெரியாத ஒருவரை மதிப்பிற்குரிய சொல் ஒன்றினை பயன்படுத்தி விழித்து பின்னர் அதனை மறந்து செயற்படுவது போன்று அல்லாது நண்பன் என்ற அடையாளப்படுத்துகை மிகவும் உரிய வகையில் பிரயோகிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. அதாவது ஒருவர் தன்னை எவ்வாறு நம்புகின்றாரோ அந்த அளவிற்கு யார் ஒருவர் மீது நம்பிக்கை வைக்கக்கூடியவராக உள்ளாரோ அவரே நண்பர் என்று அழைக்கப்படக்கூடியவராவார். அத்தகைய அளவிற்கு நம்பிக்கைக்கு உகந்தவரல்லாத ஒருவரை நண்பர் என்று குறிப்பிடுவதானது அந்த சொல்லினுடைய அர்த்தத்தை சரியான வகையில் புரிந்துகொள்ளாது பயன்படுத்துவதாகவே இருக்கும். உண்மையில் ஒருவரை நட்பாக அன்புடன் ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அவர் தொடர்பில் சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அத்தீர்மானங்களில் அவர் உண்மையிலேயே நட்புக்கு உரியவர் என்று அடையாளப்படுத்தப்படின் முழுமனதுடன் நட்பாக ஏற்றுக்கொண்டு தன்னுடைய சுயம்போன்று அந்த நண்பரை நடாத்துதல் வேண்டும். ஆனால் நண்பர் என்று தீர்மானித்த பின்னர் அவர் தொடர்பில் விசாரணைகள் செய்வதும், ஆலோசிப்பதும், நம்பிக்கையற்று செயற்படுவதும் தவறான செயற்பாடுகளாகும். இந்த அடிப்படையிலேயே சில மனிதர்கள் தங்களுடன் உடன் இருப்பவர்கள் துரோகம் செய்துவிடுவார்கள் என்ற சந்தேகத்தில் அவர்களை நம்பாது செயற்படுவதன் காரணமாக உண்மையிலேயே அவர்களினால் துரோகத்திற்கு உள்ளாக்கப்படுவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றனர். நம்பிக்கை கொள்வதில் இரண்டு அதீத நிலைகளை நாம் காணக்கூடியதாக உள்ளது. முதலாவது வகையில் நண்பர்களிடம் மாத்திரமே பகிர்ந்துகொள்ளவேண்டிய விடயங்களை தங்களுக்கு கிடைக்கின்ற காதுகளுக்கு எல்லாம் இறக்கி வைத்துக்கொண்டிருப்பவர்களும் இரண்டாவது வகையில் முடிந்தால் இரகசியங்களை தங்களிடம் இருந்தே மறைத்துக்கொள்ள முயற்சிப்பவர்களும் உள்ளனர். இவை இரண்டுமே பொருத்தமற்றவையாகும். எனினும் முதலாவது வகை வெகுளித்தனமான தவறாகவும், இரண்டாவது வகை பாதுகாப்பான தவறாகவும் உள்ளன. இவை இரண்டிற்கும் இடைப்பட்ட வகையில் தேர்ந்தெடுத்த நண்பர்களுடன் விடயங்களை பகிர்ந்துகொண்டு சிறப்பான வாழ்க்கையினை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டல் செனேகாவினால் முன்வைக்கப்படுகின்றது (Graver, & Long, 2015: 217).

நண்பர்கள் தங்களிடையே பகிர்ந்துகொள்கின்ற விடயங்களில் அறிவு மற்றும் நல்ல பழக்கவழக்கங்கள் என்பவை முக்கியமானவையாக அமைகின்றன. மனிதர்கள் பிறருடைய வார்த்தைகளை பின்பற்றுவதனைவிட நடத்தைகளையே பின்பற்றுகின்றனர். இதனடிப்படையில் எத்தகையவர்களுடன் நாம் நட்பினை ஏற்படுத்திக்கொள்கின்றோம் என்பது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு நண்பரின் நடத்தை அவருடன் தொடர்பு கொண்டிருப்பவரை பாதிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இந்தவகையில் சிறந்த நண்பராக இருப்பதற்குரிய ஒருவர் நல்ல பண்புகளைக் கொண்டவராக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. அத்தகைய நல்ல பண்புகளைக் கொண்டிருப்பதே ஒருவர் மனித இனத்திற்கு மேற்கொள்ளக்கூடிய மிகச்சிறந்த பங்களிப்பாக உள்ளது. அதாவது ஒருவர் மிகச்சிறந்த நல்ல பண்புகளை தன்னிடத்தே கொண்டு அனைவருக்கும் முன்னோடியாக செயற்படுகின்றபோது அவருடைய நடத்தையினை பின்பற்றி ஏனையவர்களும் நல் வழிமுறைகளை பின்பற்றி வாழ்வதற்கு கற்றுக்கொள்வார்கள். அத்தகையவர்கள் மனித குலத்திற்கே நட்பானவர்கள் என்று குறிப்பிடுகின்ற செனேகா தனக்கு முன்னர் இருந்த ஞானிகளாக சீனோ, சோக்கிரடீஸ், பிளேட்டோ முதலானவர்களை இத்தகைய சிறந்த மனித குல நட்பாளர்களாக குறிப்பிடுகின்றார். இதற்கு இவர்களது சீடர்கள் வெறும் போதனைகளை பின்பற்றியவர்களாக அல்லாமல் அவர்களுடன் உடன் இருந்து தாம் மேற்கொண்ட போதனைகளின் அடிப்படையில் செயற்பட்ட அவர்களது நல்ல வாழ்க்கை முறையினை கற்றுக்கொண்டவர்கள். அவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாத நல்ல பழக்கங்களை தமது சீடர்கள் பெற்றுக்கொள்வதற்குரிய செயன்முறை வழிகாட்டல்களை மேற்கொண்டவர்கள். இத்தகைய நற்பண்புடையவர்களாக இருப்பதே ஒவ்வொருவருக்கும் அவசியமாக உள்ளது. அவர்களே நண்பர்களாக இருப்பதற்குரிய அடிப்படைத் தகுதியினைக் கொண்டவர்களாக உள்ளனா; (Pigliucci, 2017: 216).

தொடர்ந்து நோக்குகின்றபோது ஞானமுடைய மனிதர்கள் சுயநிறைவுடையவர்கள் அவர்கள் தங்களுக்காக பிறர் ஒருவரின் நட்பினை பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தில் இல்லாதவர்கள் என்ற கருத்து சில தத்துவங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த உலகத்தில் நட்பின் அவசியம் இல்லாது யாராவது இருக்க முடியுமா என்ற வினாவிற்கான விடையினை கண்டறியும் முயற்சியினை செனேகா மேற்கொள்கின்றார். ஞானிகள் தன்னிறைவுடையவர்கள்

அவர்களினால் தனிமையில்கூட இன்பத்தை அனுபவிக்க முடியும், நல்ல காரியங்களை செய்ய முடியும் என்பது உண்மைதான் ஆனால் அதற்காக அவர்கள் நட்பின் தேவை இல்லாது உள்ளனர் என்றோ அல்லது இருக்கின்ற நட்புக்களை விலக்கிவிட்டு தனியே இருப்பதற்கு விரும்புகின்றனர் என்றோ கூறுவதற்கு இல்லை. இதனை பின்வருமாறு விளங்கிக்கொள்ள முடியும் ஒருவர் தன்னுடைய இரண்டு கைககளில் ஒன்றினை இழக்கின்றபோது எஞ்சியிருக்கின்றதனை வைத்து எவ்வாறு செயற்பட முடியும் என்றே சிந்திக்கவும், செயற்படவும் வேண்டும் மாறாக இழந்ததற்காக வருத்தபட்டுக்கொண்டிருப்பது விவேகமான செயலாகாது. அதுபோல ஞானிகளும் நட்பினை இழப்பதற்கில்லை. ஆனால் இழக்கின்ற சந்தர்ப்பத்தில் அதனை எண்ணி கவலை கொண்டு சோர்ந்துவிடுவது இல்லை. மாறாக அதனை ஏற்றுக்கொண்டு தங்களது சமநிலை மாற்றமடையாது தொடர்ந்து செயற்படுகின்ற இயல்புடையவர்களாக உள்ளனர். அதாவது எஞ்சியிருப்பதனை விரும்பி இழப்பதற்கும் அவர்கள் முயற்சிப்பது இல்லை இழந்ததையிட்டு வருத்தமடைவதும் இல்லை 'குறித்த சந்தர்ப்பத்தில் எது உள்ளதோ அதனைக்கொண்டு தங்களை தகவமைத்துக் கொள்ளக்கூடியவர்களாக உள்ளவர்கள் எவரோ அவரே சுயநிறைவு பெற்றவர்' என்பதன் அர்த்தமாகும் என்று செனேகா குறிப்பிடுகின்றார். தொடர்ந்து நட்பின் மகிழ்ச்சி தொடர்பாக குறிப்பிடுகின்றபோது ஏற்கனவே நன்கு ஸ்தாபிக்கப்பட்ட நண்பர்களுடன் மாத்திரமல்லாது புதிய நட்புக்களை உருவாக்கிக்கொள்ளும் முயற்சியிலும் மகிழ்ச்சியினை அனுபவிக்க முடியும் என்ற கருத்தினை முன்வைக்கின்றார். இதன்படி ஓவியன் ஒரு ஓவியத்தை வரையும்போது எத்தகைய ஈடுபாட்டுடனும், கவனத்துடனும், மகிழ்ச்சியுடனும் அதனை செய்கின்றானோ அது வரைந்து முடித்த பின்னர் தொடர்ந்து இருப்பதில்லை அவனது கவனம் வேறு விடயங்களில் சென்றுவிடும். அதனையொத்த அம்சங்களே புதிய நட்புக்களை உருவாக்கிக்கொள்வதிலும் இடம்பெறுகின்றன. எனவே இழந்துவிட்ட நட்புக்களைப்பற்றி கவலை கொள்வதனை விட புதிய நட்புக்களை உருவாக்கிக்கொள்வதில் மகிழ்ச்சியடைதல் நன்மையானது என்ற கருத்தினை முன்வைக்கின்றார் (Hadot, 1995: 72).

இவ்வாறு நட்பினை உருவாக்கிக்கொள்வதன் நோக்கம் சுயநன்மைகளை பெற்றுக்கொள்வதக்காக அல்ல மாறாக சிறந்த பண்புகளை உடையவர்களாக உள்ள அந்த நண்பர்களது நன்மைக்காக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்ற செனேகா தன்னுடைய சமகாலத்தில் இருந்த இன்னுமொரு சிந்தனைப்பள்ளியினைச் சேர்ந்த எபிகூரஸ் குறிப்பிடுவதுபோன்று 'நோய்வாய்ப்பட்டிருக்கும்போது எங்களுடன்

உடன் இருப்பதற்காகவோ, சிறை செல்கின்றபோது உடன் வருவதற்காகவோ நண்பர்கள் இல்லை மாறாக அந்த நண்பர்களுக்கு அவை ஏற்படுகின்றபோது நாம் அவர்களுடன் உடன் இருப்பதற்காகவே நட்பு கொள்ள வேண்டும்' என்று குறிப்பிடுகின்றார் (Evans, 2012: 156). இதன்படி ஒருவரிடம் இருந்து நன்மையினை எதிர்பார்த்து நட்புக்கொள்கின்றவர் அந்த நன்மையினை பெற்று முடிந்த பின்னர் அல்லது இனிமேல் தொடர்ச்சியாக நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியாது என்று உணர்கின்றபோது நட்பில் இருந்து விலகிவிடுவார். இதன் காரணமாக செல்வச்செழிப்பில் இருப்பவர்களைச்சுற்றி எப்போதும் மிகப்பெரிய கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். ஆனால் அவர்கள் வறுமைநிலையடைகின்றபோது மனிதர்கள் எதுவுமற்ற பாலைவனம்போலாகி விடுகின்றனர். இவ்விடயத்தினை அறிந்துகொண்ட வகையில் தங்களுக்கு நன்மைகளை பெற்றுக் கொள்வதற்காகவே உறவு கொண்டாடுபவர்களை நண்பர்கள் என்ற அந்தஸ்தில் இருந்து விலக்கி செயற்படுதல் செய்வதற்கு உகந்த செயலாக குறிப்பிடப்படுகின்றது. அதேவேளையில் இவ்விடயத்தினை மனதில் கொண்டு ஒருவர் தான் யாருடன் நட்பு கொண்டுள்ளாரோ அவரிடம் இருந்து தன்னுடைய தேவைகளை மறைத்து அவர் தனக்கு உதவி செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்தப்படாது பார்த்துக்கொள்கின்ற அதேவேளையில் அவருக்கு ஏதேனும் துன்பங்கள் ஏற்படுகின்றபோது அவற்றினை தீர்ப்பதற்கு முதலில் உதவிக்கரம் வழங்குகின்ற இயலுமையில் செயற்படுவதானது உண்மையான நட்பின் இலக்கணமாக அமையும் என்றும் குறிப்பிடப்படுகின்றது (Graver, & Long, 2015: 158).

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

மேற்குறித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது ஒழுக்கம் என்பது ஒரு திறனாக, தனித்துவமான ஒரு பண்பாக ஸ்டொய்க்கிய வாதத்தில் நோக்கப்படுகின்றது. நீதி, நிதானம், ஞானம், தைரியம் ஆகிய நான்கு ஒழுக்கப்பண்புகளே ஒரு மனிதனுக்கு இன்றியமையாதவையாகவும், எத்தகைய ஒரு சூழ்நிலையிலும் வளர்த்துக்கொள்ளவும், பின்பற்றவும் வேண்டியவையாகவும் குறிப்பிடப்படுகின்றது. இவற்றுடன் ஒப்பிடுகின்றபோது ஏனைய விடயங்கள் அனைத்தும் பெறுமதியற்றவையாகவே கணிக்கப்படுகின்றன. வாழ்க்கையின் ஒவ்வொரு கணப்பொழுதும் இந்த பண்புகளை பின்பற்றுவதற்கு உரியவையாக அமைகின்றன. ஒரு மனிதனுடைய உயர்வான பண்புகளாக இவை நிலைநிறுத்தப்படுகின்றபோது அவனுக்கு எதிரான எந்தவொரு சவாலும், பிரச்சினையும் எளிமையாக கையாழப்படக்கூடியவையாகவே இருக்கும்.

நல்வாழ்க்கை வாழ்வதற்கான இயலுமையினை வழங்குவதாக இருக்கும். சோக்கிரடீஸ் காலம் தொடக்கம் புராதன ஒழுக்க மெய்யியலில் அடிப்படையான ஒழுக்கப் பண்புகளாக (Cardinal Ethical Virtues) அடையாளப்படுத்தப்படுகின்ற இவை ஸ்டொய்க்கிய வாதத்தில் சிறந்த வகையில் கையாழப்பட்டு ஒழுக்க வாழ்க்கைக்கான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஞானம் என்பது குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் விடயங்களை சரியாக பகுத்தாய்ந்து அறிந்துகொள்ளுவதற்கும், உள்ளுணர்வினால் சரியான வழிகாட்டலினை பெறுவதற்கும் உள்ள இயலுமையினைக் குறிக்கின்றது. தைரியம் என்பது சவால்களையும் எதிர்பாராத ஆபத்துக்களையும் எதிர்கொள்கின்றபோது நிலைமையினை சரியாக கணக்கிட்டு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை திட்டமிட்டு நிறைவேற்றுவதனைக் குறிக்கின்றது. நிதானம் என்பது தனிப்பட்ட விருப்பார்வங்கள், பயம், பதட்டம், கவர்ச்சிகளினால் ஆட்கொள்ளப்படாது சரியான வகையில் கடமையினை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதனைக் குறிக்கின்றது. நீதி என்பது தனிப்பட்ட வகையில், குடும்பத்தில், சமூகத்தில் என ஒவ்வொரு நிலைகளிலும் பிறமனிதர்களுடனான தொடர்புகளை எவ்வாறு பேணிக்கொள்வது என்பதனைக் குறிக்கின்றது. இந்த நான்கும் சிறப்பாக ஒழுக்கமைக்கப்பட்ட ஆளுமையுடையவர்களாக குடிமக்களை உருவாக்குவதானது ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாக பங்களிப்புச் சக்தியாக அமைகின்றது. இந்த ஒழுக்கக்கூறுகளை எந்தவொருவரும் தன்னுடைய ஆளுமையின் அம்சங்களாக்கிக்கொள்வது சாத்தியமானது என்ற நம்பிக்கையினைக் கொண்டிருப்பது இந்த தத்துவத்தின் சிறப்பம்சமாகும். இதற்காக செய்ய வேண்டியது குறித்த விடயங்களை அறிந்துகொண்டு முன்மாதிரிகளுடன் அவற்றினை தொடர்ச்சியாக பின்பற்றுவதற்கு உள்ள அர்ப்பணிப்பேயாகும். மாறாக இதன்பொருட்டு சிறப்பாக அமைந்த உடன்பிறந்த இயலுமைகளோ, சமூக அந்தஸ்தோ அவசியமாக குறிப்பிடப்படவில்லை.

இளம் வயதில் வளர்த்துக்கொள்கின்ற குணப்பண்புகளே ஒருவருடைய விதியினை தீர்மானிப்பவையாகின்றன என்பது சான்றோர் வாக்கு. இளம் வயதினராக இருக்கின்றபோது என்ன விடயங்கள் பின்பற்றுவதற்கு உகந்தவை என்று பயிலப்படுகின்றனவோ அவை வாழ்நாள் பூராவும் உடன்வருபவையாகவும், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பயன்தருபவையாகவும் அமைகின்றன. இக்காரணத்திற்காகவே சிறுவர்கள் உகந்த சூழ்நிலையில் வளர்க்கப்படுவதற்கு

அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இவற்றில் அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய நண்பர்கள், படிக்கின்ற பாடசாலை, கற்றுக்கொள்கின்ற விடயங்கள் என்பன அதிக கவனத்திற்குரியவையாக அமைகின்றன. ஸ்டொய்க்கியவாதம் வழங்குகின்ற ஒழுக்க வழிகாட்டல்கள் இளைய சமூகத்தினருடைய குணாம்சங்களை சீரமைப்பதற்குரிய ஆற்றலினைக் கொண்டவையாக அமைந்துள்ளன. இத்தத்துவத்தின் சிறப்பு புரிந்துகொள்ளப்பட்டுள்ள நிலையில் அதனை சரியாக பிரயோகித்து மாணவர்களது ஒழுக்கரீதியான நடத்தையினை பொருத்தமாக கட்டமைப்பு செய்வது அவர்களது தனிப்பட்ட வெற்றிக்கும் சமூகத்தின் ஒன்றிணைந்த வெற்றிக்கும் பங்களிப்பு செய்வதாக உள்ளது. இதில் தடைகளாக உள்ள விடயங்களையே வெற்றிக்கான அடிப்படைகளாக மாற்றியமைப்பது எப்படி, சுயமதிப்பிற்கு முதன்மையளித்து ஆரோக்கியமற்ற விமர்சனங்களை கருத்தில் கொள்ளாதிருப்பது எவ்வாறு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல், இன்பங்களினாலும் துன்பங்களினாலும் பாதிக்கப்படாமல் சமநிலையான வாழ்க்கையினை பேணுதல், வெற்றியினால் ஆணவம் கொள்ளாதிருத்தல், தோல்வியினால் துவண்டுபோகாதிருத்தல், சடப்பொருட்களை ஆளுகை செய்யும் வெற்றியினைவிட மனித மனங்களை வெற்றிகொள்வதற்கான இயலுமையினை வளர்த்துக்கொள்ளுதல் முதலானவை குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன.

இவ்விடயங்கள் மாணவ சமூகத்திற்கு கற்பிக்கப்படுவதற்கான முறைப்படுத்தல்கள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் முறைசார் கல்வித்திட்டத்தின் ஊடாக இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வது பொருத்தமானதாக அமையும். கற்றுக்கொள்பவர்களிடையே எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக குறிப்பிட்ட கால அளவினைக் கொண்டதாக இந்த கல்வி அமைந்திருப்பது அவசியமாக உள்ளது. இதன்பொருட்டு சிரேஷ்ட இடைநிலை வகுப்பில் தொடங்கி உயர்தரம் வரையில் கட்டாயமான பாடமாக ஒழுக்கக்கல்வி அமைக்கப்பட முடியும். இதற்கு மேலதிகமாக பல்கலைக் கழகங்களில் அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான ஒரு பொதுவான பாடமாக அவர்களது குணாம்சங்களை செம்மைப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு கற்பிக்கப்படுவதும் அவசியமாக உள்ளது. இது துறைசார் நிபுணத்துவத்தினை இலக்காகக் கொண்டதற்கும் அப்பால் எந்த துறையினைச் சேர்ந்தவரும் சிறந்த சமூகப் பிரஜையாக தன்னுடைய பங்களிப்பினை வழங்குவதற்கான இயலுமையினை ஏற்படுத்துவதனை இலக்காகக் கொண்டதாகும். இத்தகைய ஒழுக்க வழிகாட்டல்கள்

சமயங்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் பல்வேறு மாறுபட்ட சமயங்களது பின்னணியில் மனித சமூகத்தில் பிளவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இதனை சரியாக கையாழ்வதற்காக சமயங்களின் பின்புலம் இல்லாது அனைவருக்கும் பொதுவான ஒழுக்க விழுமியங்களை பின்பற்றத்தகுந்ததாக்குவதற்கு ஸ்டொய்க்கியவாதம் காலத்திற்கு உகந்த ஒன்றாக உள்ளது என்பது இந்த ஆய்வின் ஊடாக வலியுறுத்தப்படுகின்றது.

**உசாத்துணைகள்**


Davis, C.H.S (1903). *Greek and Roman Stoicism and Some of Its Disciples,* Herbert B. Turner & Co, USA.

Didymus, A., and Pomeroy, A.J (1999). *Epitome of Stoic Ethics,* Scholars Press, USA

Evans, J (2012). *Philosophy for Life and Other Dangerous Situations – Ancient Philosophy for Modern Problems*, New World Library Publications, USA

Graver, M., and Long, A. A (2015). *Seneca – Letters on Ethics to Lucilius*, University of Chicago Press, USA

Hadot, P (2001). *The Inner Citadel: The Meditations of Marcus Aurelius*, translated by Michael Chase. Harvard University Press, USA

Hughes, G, J (2001). *Aristotle on Ethics*, Routledge Publications, USA

Inwood, B. (2010). *The Cambridge Companion to the Stoics,* Cambridge University Press, England

Jones, J.E (2013). Wisdom and Happiness in Euthydemus 278 – 282. Philosophers' Imprint 13(14) 1-21.

Long, A. A. (2004) *Epictetus: A Stoic and Socratic Guide to Life. New York: Oxford University Press*

Holowchak, M.A. (2009) Education as Training for Life: Stoic teachers as physicians of the soul, Educational Philosophy and Theory, 41:2, 166-184, DOI: 10.1111/ j.1469-5812.2007. 00384.x

Nussbaum, M (1998). *Cultivating Humanity - A Classical Defense of Reform in Liberal Education*, Harvard University Press, USA

O' Grady, P. (2005) *Meet the Philosophers of Ancient Greece.* England: Ashgate Publishing Limited

Pigliucci, M (2017). *How to be a Stoic – Using Ancient Philosophy to Live A Modern Life*, Basic Books Publications, USA

Pojman, L, P. (2005) *How Should We Live - An Introduction to Ethics*. USA: Wadsworth Cengage Learning

Stephens, W, O (2007). *Stoic Ethics: Epictetus and Happiness as Freedom*, Bloomsbury Publishing, UK

Vaughn, L (2016). *Doing Ethics - Moral Reasoning and Contemporary Issues*, W.W. Norton & Company, USA.